# மதுரை சீடு

# இன் அறுந்தவால் மாயச்சட்டை

(குழந்தைகளின் வளமைக்கல்விக்கான இருநாடகங்கள்)




எழுத்தும் வடிவமைப்பும்

• அனீஸ்

• சண்முகராஜா



**புதுயுகம் தனிச்சுற்று சிற்றிதழ் பணிமடல் - 18**

மலர்கின்ற உலகை நற்பணிகளால் காப்போம்

**மதுரை சீடு**

நலிவுற்ற குழந்தைகள் இளைஞர்களுக்கான தொண்டு நிறுவனம்

**மதுரை சீடு**
**1999 – 2011**

நலிவுற்ற குழந்தைகள் மற்றும் இளைஞர்களின் வளமைக்கல்விக்காவும், வாழ்வியல் மேம்பாட்டுக்காவும் கடந்த 12 ஆண்டுகளாக பணி செய்து வருகின்ற நிறுவனம் மதுரை சீடு.

முழுமைத்துவக் கல்வி மையங்கள், குழந்தை மன்றங்கள், தேன்கூடு வங்கி, புதுயுகம், புதியவெளிச்சங்கள், ஆளுமை மேம்பாட்டுத் திட்டங்கள், கல்வி உதவித்தொகை திட்டம் போன்றவற்றின் மூலமாக குழந்தைகள், இளைஞர்களின் கனவுகளை நனவாக்கவும், வாழ்வியல் தேடல்களை அர்த்தமுள்ளதாக்கவும், மதுரை சீடு பணி செய்து வருகிறது.

முழுமைத்துவக் கல்வி மூலம் வளமான சமூகம் அமைந்திட தன்னாளவில் முயன்று பணி செய்து வருகின்றது. கடந் த காலங்களில் சமூக பொருளாதார தளங்களில் பிற்படுத்தப்பட்ட நூற்றுக்கணக்கான குழந்தைகளும், இளைஞர்களுக்கும் வாழ்வில் ஒளி பெற்று முன்னேற்றமடைந்துள்ளனர். என்பதே மதுரை சீடு – இன் பணிகளுக்கு சிறந்ததோர் உதாரணங்களாகும். நூறுசதம் இளைஞர்களின் தன்னார்வ ஈடுபாடும், பங்களிப்புமே மதுரை சீடுக்கு புதிய பரிமாணங்களை அளித்து வருகின்றன.

மதுரை சீடு கல்வி மையங்கள், சமூகபொருளாதர தளங்களில் பின்தங்கிய விளிம்பு நிலை குழந்தைகளையும், இளைஞர்களையும் மனதிற்கொண்டு பு.நீ.கார்த்திக்பாரதி அவர்களால் 1999ஆம் ஆண்டு துவங்கப்பட்டது. 2007ஆம் ஆண்டு கரும்பாலை இளைஞர்களின் உறு துணையோடு அரசிடம் பதிவு பெற்ற தொண்டு நிறுவனமானது. இது மதுரையில் குழ்நதைகள் மற்றும் இளைஞர்களுக்கான வளமை கல்வியை முதன்மைப்படுத்தும் விதத்தில் பல்வேறு மையங்களாக இயங்கி வரும் ஓர் அமைப்பு. குழந்தைகளின், இளைஞர்களின் ஆளுமை வளர்ச்சிக்கு மாற்றுக் கலாச்சார ஊடகங்களின் வழியாகவும் முழுமைத்துவகல்வியை முன் வைக்கும் பணியை தனது திட்டச் சிறப்பாக கொண்டுள்ளது.

---

**2010 – 2011 ஆம் ஆண்டு**
**மதுரை சீடு இன் குழந்தைகள் நாடகங்கள்**

- **நவீன இராமாயணம்** (பாவனை நாடகம்)
- **நம்பிக்கை நட்சத்திரங்கள்**

வடிவமைப்பு & நெறியாளுகை : **G.அன்பரசன்** (சென்னை)

மதுரை சீடு

இன் அறுந்த வால்

மாயச்சாட்டை

(குழந்தைகள் வளமைக்கல்விக்கான இரு நாடகங்கள்)

எழுத்தும், வடிவமைப்பும்

- அனீஸ்
- சண்முகராஜா

வெளியீடு மற்றும் தொகுப்பு
A.S.கார்த்திக்பாரதி
புதுயுகம் சிற்றிதழ்
மதுரை சீடு
அர்ஜுன் சண்முகா இல்லம், 439/1, கிழக்குத் தெரு, கரும்பாலை,மதுரை-20.
பேசி : 9894805446, 94425 37670, 0452-2537670
மின்னஞ்சல் : maduraiseed1999@gmail.com
வலைதளம் : www.ashanet.org # seednarpanigal
www.madurai-seed.org

| | | |
|---|---|---|
| புத்தகத்தின் பெயர் | : | மதுரை சீடு<br>இன்<br>அறுந்த வால்<br>மாயச்சாட்டை<br>(குழந்தைகள் வளமைக்கல்விக்கான இரு நாடகங்கள்) |
| எழுத்தும் இயக்கமும் | : | அனீஸ்<br>சண்முகராஜா |
| பதிப்பு | : | அக்டோபர் 2010 முதல் மார்ச் 2011 வரை<br>புதுயுகம் சிற்றிதழ்<br>பணிமடல் – 18 |
| அச்சாக்கம் | : | ஸ்ரீ முத்தன் பிரிண்டர்ஸ் மதுரை<br>2535574,9865935571 |
| விலை | : | விற்பனைக்கு அன்று தனிச்சுற்றுக்கு மட்டும் |
| பிரதியாக்கம் | : | C.அருண்குமார், C.கற்பகஜோதி |
| குறிப்பு | : | நாடக பிரதியை பயன்படுத்த விரும்புபவர்கள் திருமிகு. அனீஸ், சண்முகராஜா மற்றும் மதுரை சீடு அனுமதி பெற வேண்டும் |
| வெளியீடு மற்றும் தொகுப்பு | : | A.S.கார்த்திக்பாரதி<br>புதுயுகம் சிற்றிதழ்<br>மதுரை சீடு<br>அர்ஜீன் சண்முகா இல்லம், 439/1,<br>கிழக்குத் தெரு, கரும்பாலை,மதுரை-20.<br>பேசி : 9894805446, 94425 37670, 0452-2537670<br>மின்னஞ்சல் : maduraiseed1999@gmail.com<br>வலைதளம் : www.ashanet.org # seednarpanigal<br>www.madurai-seed.org |

*நன்றிகள்*

- Dr.சாமுவேல் சுதானந்தா
- Prof.பிராபகர் வேதமாணிக்கம்
- அமெரிக்கன் கல்லூரி
- சென்னைஆஷா & பாஸ்டன்ஆஷா
- Dr.மெல்லியல் அண்ணாமலை
- Dr.லௌரா வில்லிகர் மற்றும் ஜான்பாட்ஸ்
- பங்கேற்ற கரும்பாலை குழந்தைகள்
- Dr.ஆடம்ஸ் மற்றும் 1999– 2007ஆம் ஆண்டு மதுரை சீடு இளைஞர்கள்

# முகவுரை

மதுரை சீடு நலிவுற்ற குழந்தைகளின் வளமைக் கல்விக்காக துவங்கப்பட்டு செயலாற்றி வந்த சூழலில் எமது பணிகளின் ஒரு கூறாக பேராசிரியர்கள் பிரபாகர், சாமுவேல் சுதானந்தா மூலம் குழந்தைகள் நாடகம் எனும் சிந்தனை எழுச்சி பெற்றது.

குழந்தைகளுக்கு சமூக மதிப்புகளையும், வாழ்வியல் திறன்களையும் கற்பிக்க நிகழ்கலைகளை சிறந்த ஊடகமாக கருதியபோது சீடு இன் பணிகள் சிறப்புற அமைந்தன. சீடு 2011 ஆம் ஆண்டு டிசம்பர் 24,25,26 அமெரிக்கன் கல்லூரி டட்லி விடுதி வளாகத்தில் நாடகபட்டறையினை திருமிகு. அனீஸ், திருமிகு. புருஷோத்தமன் மூலம் நடத்தி "சூரியன் பூமிக்கு வந்த கதை" என்ற குழந்தைகள் நாடகத்தை அரங்கேற்றியது. 2002 ஏப்ரல் 26ஆம் தேதியன்று மதுரை சீடு குழந்தைகள் எமது மேற்பார்வையில் "ஆனைக்குட்டி சங்கரன்" "உருவமும், உள்ளமும்" என்ற இரு நாடகங்களை சீடு இரண்டாமாண்டு விழாவில் நிகழ்த்தி காட்டினர். இது எமது குழந்தைகளின் கலை ஆர்வத்திற்கு பெரும் தீனியாக அமைந்தது.

சீடு, 2002 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 30,31 தேதிகளில் அமெரிக்கன் கல்லூரி வளாகத்தில் திருமிகு. சண்முகராஜா மூலம் நாடகப்பட்டறை நடத்தப்பட்டு "வைரகாக்கா" என்ற குழந்தை நாடகங்களை அரங்கேற்றியது .சீடு 2002ஆம் ஆண்டு பெருங்குடி RTI வளாகத்தில் நாடகபட்டறை ஒன்றினை திருமிகு. சண்முகராஜா மூலம் நடத்தி குழந்தைகளின் கூட்டு தயாரிப்பில் "மாயச்சட்டை" என்ற குழந்தைகள் நாடகத்தை அரங்கேற்றியது. சண்முகராஜாவின் கருத்தாக்கத்தில் குழந்தைகள் பாடல், கதையை விளக்கும் முறை என குழந்தைகளின் முழு பங்கேற்புடன் கூடிய நாடகமாக மாயச்சட்டை அமைந்திருந்தது. இந்நாடகம் அவ்வாண்டு சென்னையில் நிகழ்ந்த மாநில பெண் குழந்தை தொழிலாளர் எதிர்ப்பு மாநாடு, அமெரிக்கன் கல்லூரி Winter Theater Festival உள்பட தமிழகமெங்கும் பரவலாக பள்ளி, கிராமங்களில் நடத்தப்பெற்று பெரும் வரவேற்பினைப்பெற்றது.

2003 ஆம் ஆண்டு ஏப்ரல் 19 முதல் 23 வரை Dr.JCBA., இல்லத்திலும் 24 முதல் 26 வரை பெருங்கடி RTI வளாகத்திலும் திருமிகு அனீஸ் மூலம் ஒரு நாடகப் பட்டறையை சீடு நிகழ்த்தியது. முழுக்க முழுக்க நெறியாளுநர் திருமிகு அனீஸ் அவர்களின் பெரும் ஆக்கத்தில் "அறுந்தவால்" எனும் நாடகம் உருப்பெற்றது. இந்நாடகமும் இவ்வாண்டில் நிகழ்ந்த மாநில அளவிலான இளம்விஞ்ஞானிகள் பயிற்சி முகாம் உள்பட பல பள்ளிகளிலும், மதுரையில் பல்வேறு இடங்களிலும் நிகழ்த்தப்பெற்று வரவேற்பினைப் பெற்றது.

தொடர்ந்து 2000 முதல் 2003 ஆம் ஆண்டு வரை குழந்தைகள் நாடக தயாரிப்புகளில் ஆர்வம் கொண்ட சீடுக்கு நிதி நிலைமை பெரும் தொந்தரவானது. பெரிய நாடக தயாரிப்புகள் நின்று போயின. இருப்பினும் குழந்தைகள் வான்முகில் கலைமன்றம், மூலம் அமெரிக்கன் கல்லூரி தமிழ்த்துறை, ஆங்கிலத்துறை, நிஜநாடக இயக்கம், தலித்ஆதாரமையம், த.மு.எ.ச. போன்ற அமைப்புகளின் நாடக நிகழ்வுகளை கண்டு களித்து கலையறிவு பெற்று வருகின்றனர். தொடர்ந்து எதிர்காலத்தில் குழந்தை நாடக முயற்சிகளில் ஈடுபடுவது எமது திட்டம். முன்னர் பார்வையாளர்களிடையே பெறும் வரவேற்பினை பெற்ற மாயச்சட்டையும், அறுந்தவாலும் நாடக பிரதிகளாக, உரிய குழந்தை இலக்கியமாகப் பதிவாக புதுயுகம் சிற்றிதழை பயன்படுத்திக் கொள்கின்றோம். எம்மிடம் பெரும் ஈடுபாடு காட்டிய அற்புதமான நாடக கலைஞர்கள் திருமிகு. அனீஸ் அண்ணா மற்றும் திருமிகு சண்முகராஜா அண்ணா அவர்களுக்கும் எமது நெஞ்சார்ந்த நன்றிகள். 1999 முதல் 2006 ஆம் ஆண்டு வரை எம்மை சுதந்திரமாகவும் பல்வேறு தளங்களிலும் பணி செய்ய காரணமான ஆடம்ஸ், மற்றும் 2007ஆம் ஆண்டிலிருந்து எமது பெருமைக்குரிய சீடு ஆதரவாளர்கள், லௌரா வில்லிகர், ஜான்பாட்ஸ் மற்றும் புதுயுகம் சிற்றிதழுக்கு உற்ற உதவியாய் இருக்கும் சென்னை ஆஷா மற்றும் மெல்லியல் அண்ணாமலை அக்காவுக்கும் இதயம் நிறைந்த நன்றிகள்.

30.1.2011
மதுரை

A.S.கார்த்திக்பாரதி
மதுரை சீடு

# Arundha Vaal

One of the main aims of MADURAI SEED is to provide education through the arts. Talents and skills in children can be developed by educating by means of games and entertainment. This method also ensures the development of capabilities and skills in less academically talented children.

Drama works well to promte social skills in children. Accordingly/ every year SEED conducts residential theatre camps and workshops with the best available experts in children's drama. For example in 2003 two workshops were conducted under the guidance of director Mr.Aneesh. The drama Arundha Vaal was prepared in these workshops.

The title of this drama means "Cut Tail (of a Monkey)." The play tells the story of how man arose from monkeys. It also shows that though man has no tail, sometimes he still behaves like a monkeys. The drama is presented as a series of stories told by a joker. when the joker is telling a story, tails grow on the children who are listening.

These Stories require imagination and creativity. The Children paly folklore games in which they act at times like humans and at other times like monkeys. They skip from one character to another : a tail is the only difference between man and monkeys. They skip from addition to stage acting, the actors interact with spectators . Many folklore games which are played only in Tamil nadu have been included in this drama.

**First Story :-**

The hats of a hat-seller are taken away by monkeys. The monkeys wear the hats, and when the hat-seller demands them back, some body monkeys ask for a story. So the hat-seller - who is also a joker - tells a story. It is about the growth of tails on monkeys.

when man was leading an uncivilized nomadic hunter's life, he wandered in the forest. He covered his body only with leaves and bark One day he discovered fire. by mistake he burn down the entire forest. After that this is the story of how man got a tail and became like a monkey.

Again the hat-seller asks the monkeys to return his hats, and the monkeys demand another story. So a story about how the man - monkey's tail got cut is told :

There is a festival in a country. God comes to know about the tail that man has attached to himself so he visits a group of people in the country. But God is quite ugly his teeth are all broken. when the people come to know about God's broken teeth they start making fun of him. God gets agry and cuts off their tails.

Second Story :

Some monkeys with their tails cut, setup a kingdom in a forest. This kingdom is full of mango trees. The monkey king orders his subjects not to throw any mangoes into the river. But one of the monkeys disobeys him and throws a mango into the river.

The fruit gets into the hands of some fishermen, who take it to their king. Thefruit is very tasty, so the human king fights with the king of the monkeys with cut tails in order to get the mango trees the monkey king presents his savior with a mango seed and tells him to plant it in his own country.

The female actor who plays the part of a child the joker story teller god and king puts some mangoes into a basket. (Here the hats in the monkeys' hands are to be viewed as mangoes.) Then the children start crying. they complain to the story-teller that they how have tails because they listened to his stories. They show their tails to the elders and then run away.

(குழுவாகப் பாடல்)
கூர வீட்டுக் காரி
குட்ட வாலுக்காரி
கூட்டாஞ்சோறு கொழம்பு வச்சு
கூடி உண்ண வாடி. (2)

கொய்யாக் கொழம்பு வச்சுக்கோ
கொப்பு மேல குந்திக்கோ
கோவக் காயில் கூட்டு வச்சு
விருந்து வைப்போம் வாடி.

(குழுவாகப் பாடல்)
கூர வீட்டுக் காரி
குட்ட வாலுக்காரி
கூட்டாஞ்சாறு கொழம்பு வச்சு
கூடி உண்ண வாடி (2)

குச்சி வீடு கூர வீடு
குட்ட வாலுக்காரிக்கு
மச்சி வீடு மண்ணு வீடு
அறுந்த வாலுக்காரிக்கு
(பாடும் போதே இரு அணிகளாகப் பிரிதல்)

| | | |
|---|---|---|
| அணி 1 | : | குட்டவாலுக்காரி |
| அணி 2 | : | அறுந்த வாலுக்காரி |
| அணி 1 | : | குட்டவாலு |
| அணி 2 | : | அறுந்த வாலு |
| அணி 1 | : | குட்ட வாலு. குட்டி வாலு. அறுந்த வாலு… |
| அணி 2 | : | குட்ட வாலு. குட்டி வாலு. அறுந்த வாலு. கொரங்கு வாலு… |
| தலைவி 1 | : | குட்ட வாலு.. |
| தலைவி 2 | : | (முதல் அணித் தலைவியை அடிக்க) |
| தலைவி 1 | : | போடி கொரங்கு .. |
| தலைவி 2 | : | நீதாண்டி கொரங்கு … |
| தலைவி 1 | : | நீதாண்டி கொரங்கு … |
| தலைவி 2 | : | நீ கொரங்கு. உங்க அம்மா கொரங்கு. உங்க அப்பா கொரங்கு … |
| தலைவி 1 | : | நீ கொரங்கு உங்க அம்மா கொரங்கு உங்க அப்பா கொரங்கு. உங்க தாத்தா கொரங்கு. உங்க பாட்டி கொரங்கு … |
| தலைவி 2 | : | நீ கொரங்கு உங்க அம்மா கொரங்கு உங்க அப்பா கொரங்கு. உங்க தாத்தா கொரங்கு. உங்க பாட்டி கொரங்கு …உங்க முப்பாட்டன் கொரங்கு. உங்க முப்பாட்டி கொரங்கு |
| தலைவி 1 | : | அப்ப எல்லாருமே கொரங்கா ? |
| குழு | : | ஆமா |
| அணி 1 | : | எல்லாருமே கொரங்கா ? |
| குழு | : | ஆமா |
| அணி 1 | : | கொரங்கு எப்படியிருக்கும்னு பார்த்திருக்கியா நீ? |
| அணி 2 | : | மனுஷன் எப்படியிருப்பான்னு பாத்திருக்கியா நீ? |
| அணி 1 | : | நீ மொதல்ல கொரங்கு எப்படி இருப்பான்னு பாத்திருக்கியா நீ? |
| அணி 2 | : | நீ மொதல்ல மனுஷன் எப்படியிருக்கும்னு பாத்திருக்கியா நீ ? |
| அணி 1 | : | நீ மொதல்ல கொரங்கு எப்படியிருக்கும்னு பாத்திருக்கியா நீ? |
| அணி 2 | : | நீ மொதல்ல மனுஷன் எப்படியிருப்பான்னு பாத்திருக்கியா நீ? (இடையில் ஒருவர்) |

மூதாட்டி : ஏய்! நிறுத்துங்க. நிறுத்துங்க. இப்ப இங்க என்ன சண்டை?
முதல்குழு : இவங்களுக்கு (இரண்டாம் குழுவைக்காட்டி) கொரங்கு எப்படியிருக்கும்னு தெரியலயாம்.
2ஆம் குழு : இவுங்களுக்க (முதல் குழுவைக் காட்டி) மனுஷன் எப்படியிருப்பான்னு தெரியலயாம்.
மூதாட்டி : இப்ப இது தான்இங்கப் பிரச்சனையா?
ஏய்! பிடிங்கடி...
(முதல் அணித்தலைவியை குரங்கு போல வேடம் பூணச் செய்தல்)
மூதாட்டி : இது யாரு?
அனைவரும் : கொரங்கு
மூதாட்டி : பிடிங்கடி
(இரண்டாம் அணித்தலைவியை கோமாளி வேடம் பூணச்செய்தல்)
மூதாட்டி : இது யாரு?
அனைவரும் : மனுஷன்
மூதாட்டி : மனுஷன் இல்ல கோமாளி.
குழு : கோமாளியா? கோமாளி என்ன செய்வான்.
மூதாட்டி : கோமாளி கூத்தாடுவான், சிரிக்க வைப்பான், பாட்டுப் பாடுவான், டான்ஸ் ஆடுவான். ஏன்
கதை கூட செல்லுவான்?.
குழு : கதை சொல்லுவான? எங்க கதை சொல்லச் சொல்லு...
கதை சொல்லச் சொல்லு...
மூதாட்டி : கதை சொன்னா, கதை கேட்கிறவங்களுக்கு வால் மொளைக்கும்.
பரவாயில்லயா?
குழு : பரவாயில்லை.
மூதாட்டி : அப்ப கதையைக்கேளுங்க!
கோமாளி : கோமாளி வந்திட்டேன், நான் கோமாளி வந்திட்டேன்.
குழு : கோமாளி வந்திட்டேன்,நான் கோமாளி வந்திட்டேன்
கோமாளி : கூடியிருக்கும் உங்களுக்கெல்லாம் வணக்கம் தந்திட்டேன்.
குழு : கூடியிருக்கும் உங்களுக்கெல்லாம் வணக்கம் தந்திட்டேன்.
கோமாளி : வாங்க வாங்க உக்காருங்க.
: வந்த காலில் நிக்காதீங்க...
குழு : வாங்க வாங்க உக்காருங்க
வந்த காலில் நிக்காதீங்க.
கோமாளி : இப்பத்தான் வந்திங்களா. இதுக்கு முன்னமே வந்தீங்களா.
குழு : இப்பத்தான் வந்தங்களா. இதுக்கு முன்னமே வந்தீங்களா.
கோமாளி : நாடகம் பார்க்கப் போறோமின்னு சொல்லிட்டு வந்தீங்களா?
குழு : நாடகம் பார்க்கப் போறோமின்னு சொல்லிட்டு வந்தீங்களா?
கோமாளி : வாங்க வாங்க உக்காருங்க. வந்த காலில் நிக்காதீங்க.
குழு : வாங்க வாங்க உக்காருங்க வந்த காலில் நிக்காதீங்க.
(திருட்டு தனமாக குரங்குகள் ஒவ்வொரு குல்லாவாக எடுத்துச் செல்கின்றன)
கோமாளி : நான் தான் குல்லா விக்கிற கோமாளி.என்கிட்ட கலர்.கலராகுல்லா இருக்கு வாங்கிக்கிறிங்களா?
(குல்லாவைக் குரங்குகள் வைத்திருப்பதை பார்த்து அதிர்ந்த கோமாளி)
ஏய் கொரங்குகளா! குல்லாவைக்கொடுங்க.
குழு : தர மாட்டோம்!
கோமாளி : ஏய்.பிடி.. குல்லாவைக் கொடு...
குழு : தரமாட்டோம்!
கோமாளி : ஏய் பிடி குல்லாவக் கொடு.
குழு : தர மாட்டோம்.
கோமாளி : குத்தாலக் கொரங்கே...
கொப்ப விட்டு எறங்கு
குழு : குல்லா விக்கிறக் கொரங்கே
கத்திக் கத்திக் கிறங்கு

கோமாளி : பார்த்தீங்களா. இதுகளுக்கு வால் இருக்கதுனாலதானே இதுகெல்லாம் இப்படி சேட்டை பண்ணுதுக. இதுகளுக்கு வால் எப்படி வந்திருச்சுங்கிற கதை எனக்குத்தெரியும்.

குழு : கதையா சொல்லு சொல்லு

கோமாளி : முதல்ல என் குல்லாவக் குடுங்க கதைய சொல்றேன்.

குழு : நீ கதையை சொல்லு நாங்க குல்லாவத் தர்றோம்.

கோமாளி : கதையை சொன்னாக் குல்லாவத் தருவீங்களா?

குழு : தருவோம்.

கோமாளி : சரி சொல்றேன். ரொம்ப காலத்துக்கு முன்னால.

குழு : ம்

கோமாளி : உலகமே காடா இருந்துச்சு.

குழு : ம்

கோமாளி : அந்தக் காட்டுல மனுஷங்க வாழ்ந்தாங்க

குழு : ம்

கோமாளி : அவங்களுக்கு ஒரு ஆச, வீடு, நகரம் எல்லாம் உருவாக்கணும்னு

குழு : ம்

கோமாளி : அதனால

குழு : ம்

கோமாளி : சிக்கி, முக்கிக் கல்லெடுத்து
என்னா கல்லெடுத்து?

குழு : சிக்கி முக்கிக் கல்லெடுத்து.

கோமாளி : சிக்கி முக்கிக் கல்லெடுத்து
நெருப்பு பத்த வச்சாங்க
அந்த நெருப்பு ஒரு மரம் பத்தி, இரண்டு மரம் பத்தி, மூணு மரம் பத்தி,
நாலு , அஞ்சு, ஆறு இப்படி எல்லா மரமும் பத்தி

குழு : ம்

கோமாளி : காடே ஜெகஜ்ஜோதியா எரிஞ்சுச் அந்த நெருப்பால மனுஷனோட நீளமான தாடியையும்

குழு : ம்

கோமாளி : நீளமான முடியையும்

குழு : ம்

கோமாளி : கருகிப் போச்சி

குழு : ம்

கோமாளி : அது மட்டும் இல்லாம

குழு : ம்

கோமாளி : நெருப்புல வந்த புகையெல்லாம்மேலப் பட்டு

குழு : ம்

கோமாளி : பாக்கவே அசிங்கமா இருந்தாங்க

குழு : ம்

கோமாளி : அது மட்டும் இல்லாம

குழு : ம்

கோமாளி : காத்தடிச்சு...

குழு : ம்

கோமாளி : சாம்பல்லாம் மேலப் பட்டு

குழு : ம்

கோமாளி : பார்க்கவே அசிங்கமா ஆயிட்டாங்க.

குழு : ம்

கோமாளி : இதோட தன் மனைவியையும், பிள்ளையும் எப்படி பாக்குறதுன்னு நெனச்சு மரத்துல இருந்த இல, தல, செடி, கொடி எல்லாத்தையும் பிடுங்கி.

குழு : ம்

கோமாளி : வாலாத் திரிச்சு

குழு : ம்

கோமாளி : தன் இடுப்புல வச்சிக்கிட்டாங்க. இதோட தன் மனைவியையும்

கொழந்தைங்களையும் பார்க்கப் போனாங்க. அவுங்க மனைவியும் குழந்தைகளும் அதப்பாத்து ரொம்ப சந்தோஷப்பட்டாங்க. அப்ப வச்ச வாலு தான். நிரந்தரமா ஒட்டிக்கிச்சு சரி கதைய சொல்லி முடிச்சிட்டேன் என்குல்லாவக் குடுங்க

குழு : தரமாட்டோம்.
கோமாளி : ஏன்?
குழு : எங்களுக்குத் தான் புதுசா வாலிருக்கே?
கோமாளி : இப்படி சேட்டை பண்ணதுனாலதான் ஒருத்தன் உங்க வால அறுத்தான்.
குழு : யாரு?
கோமாளி : கடவுளு
குழு : எப்படி
கோமாளி : அது ஒரு பெரிய கதை
குழு : கதையா? சொல்லு. சொல்லு
கோமாளி : முதல்தடவ இப்படித்தான் சொன்னீங்க. குல்லாவத் தரமாட்டேன்னு சொன்னீங்க இப்ப ரெண்டாவது கதையா? முடியவே முடியாது. முதல்ல குல்லாவக் கொடுங்க. கதையை சொல்றேன்.
குழு : நீ கதையை சொல்லு நாங்க குல்லாவத் தர்றோம்.
கோமாளி : நிச்சயமா?
குழு : நிச்சயமா?
கோமாளி : சரி சொல்றேன்.
மனுஷனுக்கு வால் மொளச்சிருக்கத
குழு : ம்
கோமாளி : கடவுள் கேள்விப்பட்டாரு.
குழு : ம்
கோமாளி : அதப்பாக்குறதுக்காண்டி.
குழு : ம்
கோமாளி : பூமிக்கு வந்தாரு
குழு : ம்
கோமாளி : பூமிக்கு வந்தாரு
குழு : ம்
கோமாளி : ஊரே திருவிழாக் கோலமாயிருச்சு.
குழு : தனந் தந்தானே தானேனே. தானேனே
தனத் தந்தானே தானானே தானானே
வாலப் பாக்க வாராரு. வனராஜா
வாழமரம் அகல் ஏத்தி வரவேற்போம்
மல்லிகைப் பூ மாலத் தொடுங்கடி. தனத்தந்தானே
மத்தியானம் மணக்க. மணக்க விருந்து வைப்போம்டி
நம்மக் கடவுளுக்கு வாலக் காட்டி
வாழ்த்துச் சொல்லுவமடி
தனத் தந்தானே தானானே தானானே
தனத்தந்தானே தானானே தானானே
குழு : ஏய்! கடவுள் வந்திட்டாரு
ஏய்! கடவுள் வந்திட்டாரு
(கடவுள் இரு கைகளையும் பிடித்து)
கடவுளே எங்க வீட்டுக்கு வாங்க
கடவுளே எங்க வீட்டுக்கு வாங்க
(அவர்கள் செய்த களேபரத்தில் கடவுள் கீழே விழுந்து. அவரது பற்கள் உடைந்து விழுகிறது )
குழு : பொக்க வாயிக் கடவுளு
பொக்க வாயிக் கடவுளு
(கடவுள் அழத் தொடங்க)
மேலுப் பல்லு. கீழுப் பல்லு

ஆறாறு, முப்பத்தாறு (2)
கோமாளிக் கடவுளுக்குப் பல்லுப் போச்சு
சொல்லுப் போச்சு (2)
காடு நடு நடுங்க கரு கருன்னு இருட்டிருச்சு
அண்டம் கிடுகிடுங்க ஆகாயம் நடுநடுங்க
போட்ட குஸ்தியில் ஆடிப்போச்சுஅத்தன பல்லுகளும்
அந்தர் படியில் கொட்டிப் போச்சு
மொத்தப் பல்லுகளும்
ஹேய்! போட்ட குஸ்தியில் ஆடிப்போச்சு
அத்தன பல்லுகளும்
(கடவுளுக்கோ கோபம் அதிகரிக்க)

கடவுள் : என்னையவா கேலி செய்றீங்க.
இப்ப உங்க வால என்ன செய்றேன் பாருங்க
(ஒவ்வொரு வாலாக, கடவுள் வெட்டத் துவங்குகிறார்)
சதக்...
சதக்...
சதக்...

கோமாளி : இப்படித்தான் மனுஷனுக்கு வால் அறுந்துச்சு. சரி கதையை சொல்லி முடிச்சிட்டேன். குல்லாவக் குடுங்க

குழு : தரமாட்டோம்.

கோமாளி : தரமாட்டீங்களோ! ஏன்?

குழு : (தங்களுக்குள் கலந்தாலோசித்து விட்டு) தரமாட்டோம்

கோமாளி : ஏன்?

குழு : ஏன்னா எங்களுக்குத்தான் வாலிருக்கே

கோமாளி : வாலிருந்தா என்ன. நீங்களும், நாங்களும் ஒண்ணு தானே

குழு : எப்படி

கோமாளி : அது ஒரு பெரிய கதை

குழு : கதையா? சொல்லு, சொல்லு, சொல்லு

கோமாளி : ஆச தோச,அப்பளம் வடை
ஒவ்வொரு தடவையும் நான் இப்படி கதைய சொல்லுவேன் நீங்க குல்லாவத் தரமாட்டீங்களா?
ஒழுங்கா குல்லாவத் தாங்க கதையை சொல்றேன்.

குழு : நீ கதையை சொல்லு நாங்க குல்லாவத் தர்றோம்.

கோமாளி : உங்க வாலு மேல சத்தியமா ?

குழு : வாலு மேல சத்தியமா?

கோமாளி : ஏய்! சின்னக் கொரங்கே நீ?

குரங்கு : தருவோம்

கோமாளி : ஏய்! மொன்ன வாலுக் கொரங்கே நீ?

குரங்கு : தருவோம்.

கோமாளி : ஏய்! ரெட்ட வாலுக் கொரங்கே நீ?

குரங்கு : தருவோம்

கோமாளி : சரி சொல்றேன்
வெகு தூரத்தில் இருந்து

குழு : ம்

கோமாளி : நம்ம நாட்டுக்கு..

குழு : ம்

கோமாளி : ஒரு பெரிய ஜடாமுனி வந்தாரு

குழு : ம்
(அரண்மனையில்)

முனிவர் : (அரசரை நோக்கி) ஏய் மன்னா!

குழு : மன்னா!

முனிவர் : உன் நாட்டுக்கு ஒரு பெரிய பஞ்சம் வரப்போகுது

குழு : பஞ்சம் வரப்போகுது

முனிவர் : அதனால இப்பவே தண்ணீரையும் உணவுப்பொருட்களையும் சேமிச்சு வை

குழு : சேமிச்சு வை.

கோமாளி : அப்படின்னு அந்த முனிவர் சொல்லிட்டு போனாரு

குழு : ம்

கோமாளி : உடனே மன்னர் என்ன செஞ்சாரு தெரியுமா?

குழு : என்ன செஞ்சாரு?

கோமாளி : நாலு காவலாளிகள் கூப்பிட்டு

குழு : ம்

கோமாளி : மக்கள்ட்டப்போயி

குழு : ம்

கோமாளி : உணவையும், தண்ணீரையும் வாங்கி சேமிச்சு வைக்க சொன்னாரு

குழு : ம்

கோமாளி : அதன்படி அவங்களும் சேமிச்சு வச்சாங்க

குழு : ம்

கோமாளி : ஆனா அந்த களவாணி பசங்க என்ன செஞ்சாங்க தெரியுமா?

குழு : என்ன செஞ்சாங்க

கோமாளி : ஒரு நாளைக்கு

குழு : ம்

கோமாளி : ஆறு வேள சாப்பிட்டு

குழு : ம்

கோமாளி : குண்டாயிட்டாங்க
எப்படியாயிட்டாங்க ?

குழு : குண்டாயிட்டாங்க

கோமாளி : இது தெரிஞ்ச அரசர்

குழு : ம்

கோமாளி : அந்த நாலு காவலாளிகளையும் கூப்பிட்டு

குழு : ம்

கோமாளி : முனிவரையே தண்டனை வழங்க சொன்னாரு

குழு : ம்

(அரண்மனையில்)

முனிவர் : ஏய்! திருட்டு பசங்களா?

குழு : ஏய்! திருட்டு பசங்களா?

முனிவர் : மக்கள் கிட்ட சேமிச்சு வச்ச உணவை திருடியா சாப்பிடுறீங்க!

குழு : திருடியா சாப்பிடுறீங்க?

முனிவர் : காட்டுக்குப் போயி இலைகள்ல கூடு கட்டி வால் மொளச்சு வாழுங்க.
வால் மொளச்சு வாழுங்க
உடனே எல்லாக் குரங்குகளும், கிளம்பிச்செல்கின்றன

கோமாளி : ஏய் கொரங்குகளா எங்க போறீங்க!

குழு : காட்டுக்கு..

கோமாளி : எதுக்கு?

குழு : நீ தான் எங்கள திருடன்னு சொன்னேல?

கோமாளி : சரி என் குல்லாவ குடுத்துட்டுப் போங்க.

குழு : தரமாட்டோம்

கோமாளி : ஏய்! கொரங்குளா, நீங்க காட்டுக்குப் போயி சும்மா இல்ல ஒரு பெரிய ஒரு பெரிய மாமரக் கோட்ட காட்டி, ஒரு பெரிய ராஜ்ஜியத்தையே உருவாக்கினீங்க.

குழு : காட்டுக்குச் சென்ற குரங்கினம்.
டக்.. டக்.. டக்...
காட்டை ஆண்ட குரங்கினம்

டக்.. டக்.. டக்..
வீட்டைக் கட்டி, நாட்டைக் கட்டி
ராஜ்ஜியத்தைப் படைத்தது.
காட்டுக்குச் சென்ற குரங்கினம்
காட்டை ஆண்ட குரங்கினம்,

வீட்டைக்கட்டி, நாட்டைக் கட்டி,
ராஜ்ஜியத்தைப் படைத்தது.
மாமரத்துக் கோட்டையிலே
மல்கோவா மெத்தையிலே
மாம்பூவாய் மாலையிட்ட மாமரத்து அரசன்

குரங்குகளின் அரசன் : அறுந்த வாலு அரசன்
மாமரத்துக் கோட்டையிலே
மல்கோவா மெத்தையிலே
மாம்பூவாய் மாலையிட்ட மாமரத்து அரசன்

குழு : அறுந்த வாலு அரசன்
அரசன் : மாமரத்துல காய்க்கிறபழுத்த..
குழு : சாப்பிடலாம்
அரசன் : மாமரத்துல காய்க்ற பழுத்த...
குழு : விளையாடலாம்
அரசன் : மாமரத்துல காய்க்கிற பழுத்த..
கெட்ட குரங்கு : தண்ணியிலே போடலாம்
அரசன் : (கெட்ட குரங்கை உதைத்தபடியே)
தப்பு, தப்பு, தப்பு, தப்பு
தண்ணியிலப் போடக் கூடாது
(ராஜா குரங்கு தூங்க ஆரம்பித்தது)
கெட்டகுரங்கு : ரைட்டா? (பழத்தை சாப்பிடுகிறது)
குழு : ரைட்டு
கெட்டகுரங்கு : ரைட்டா? (பழத்தால் கிரிக்கெட் விளையாடுகிறது. இதுபோல் பழத்தைக் கொண்டு பல்வேறு விளையாட்டுகள் விளையாடுகிறது)
குழு : ரைட்டு
கெட்ட குரங்கு : ரைட்டா? (தண்ணீரில் போட எத்தனிக்க)
குழு : தப்பு
கெட்ட குரங்கு : ரைட்டா?
குழு : தப்பு
கெட்ட குரங்கு : ரைட்டா?
குழு : தப்பு
கெட்ட குரங்கு : ரைட்டா?
குழு : தப்பு
கெட்ட குரங்கு : தப்பு (ஆற்றில் பழத்தைப் போட்டு விட)
குழு : ஆத்துல போட்ட மாம்பழம்
மீனுத் திங்கப் பாக்கனும்
ஆத்தக் கடந்து, மேட்டக் கடந்து
கடல்ல சேர்றதப் பாக்கனும் (2)
மீனவர்கள் : (நடுக்கடலில்)
கடலிலே மீன் பிடிக்க
குழு : பிள்ளைகளா வாங்க
மீனவர்கள் : காட்டு மரம் தள்ளிவிட
குழு : பிள்ளைகளா வாங்க
மீனவர்கள் : ஆத்தக் கடந்திட
குழு : பிள்ளைகளா வாங்க கடலக் கடந்திட
பிள்ளைகளா வாங்க
மீனவர்கள் : கப்பலில ஏறிட

| | | |
|---|---|---|
| | | பிள்ளைகளா வாங்க |
| | | (மீன் கூடைகளை ஒவ்வொன்றாக இறக்குகின்றனர்,பெண்கள்) |
| பெண்கள் | : | லாபம்... ஒண்ணு |
| | | லாபம்... ரெண்டு |
| | | லாபம்... மூணு |
| | | லாபம்... நாலு |
| | | லாபம்...அஞ்சு |
| ஒரு பெண் | : | ஏய்! இங்கப் பாருங்கடி.. |
| (ஆச்சரியத்துடன்) | | ஏதோ மஞ்சளா இருக்கு... |
| மற்ற பெண்கள் | : | எங்கே,காட்டு, காட்டு, காட்டு |
| பெண் 1 | : | ஏய்! இது ஒரு விஷப் பூச்சி |
| பெண் 2 | : | ஏய்! இது உருண்ட மீனுடி |
| பெண் 3 | : | இல்லடி! இது மீனு முட்டடி |
| பெண் 4 | : | ஏய்! இது காய் டி |
| பெண் 5 | : | ஏய்! இதுபழம் |
| பழத்தைக் கண்டெடுத்தவள் | : | சரி, கத்தி குடு. |
| | | (நறுக்கிக் கொண்டிருக்கும் போதே) |
| பெண் 1 | : | எங்கே, எனக்குத் தா, எனக்குத் தா. |
| பெண் 2 | : | ஏய்! இது வெஷமா இருக்கப் போகுதுடி |
| பெண் 1 | : | அய்யோ! எனக்கு வேணாம் |
| ப. கண்டெடுத்தவள் | : | (கையில் நறுக்கியத் துண்டுடன்) எங்க, ஆ சொல்லு. |
| பெண்3 | : | ஆ... (உண்டு ருசித்தபடியே) |
| | | ஏய்! இந்தப் பழம் ரொம்ப இனிப்பா இருக்குடி. |
| மற்ற பெண்கள் | : | ஹை! எனக்குத் தா,எனக்குத் தா. |
| ப.கண்டெடுத்தவள் | : | (அனைவரையும் விலக்கிய படி) சரி, வாங்கடி ராஜாக்கிட்டப் போகலாம் |
| | | (அரண்மனையில் அரசன்) |
| | | (ராஜாவாகக்கோமாளி) |
| ப.கண்டெடுத்தவள் | : | ராஜா! இந்தப் பழத்த நாங்கக் கண்டெடுத்தோம் |
| ப.உண்டு பார்த்தவள் | : | ராஜா! இந்தப் பழம் ரொம்ப இனிப்பா இருக்கு. |
| | | (பழத்தை உண்டு மகிழ்ந்த மன்னர்) |
| ராஜா | : | இந்தப் பழத்த எங்கக் கண்டெடுத்தீங்க |
| மீனவப் பெண்கள் | : | கடல்ல. |
| ராஜா | : | இந்தப் பழத்தோட மரம் நம்ம நாட்டுக்குத் தேவை.இந்த பழத்தத் தேடி நாம கடலுக்குப் போகலாம். வாங்க |
| கப்பலோட்டி | : | கப்பலில ஏறிட... |
| குழு | : | பிள்ளைகளா வாங்க |
| கப்பலோட்டி | : | கடலக் கடந்திட... |
| குழு | : | பிள்ளைகளா வாங்க |
| கப்பலோட்டி | : | ஆத்தக் கடந்திட |
| குழு | : | பிள்ளைகளா வாங்க |
| கப்பலோட்டி | : | காட்டுக்குள்ளப் போயிட... |
| குழு | : | பிள்ளைகளா வாங்க |
| | | (ஆற்றங்கரையில் மரம் இருப்பதைக் கண்ட வீரர்கள்) |
| வீரர்1 | : | ராஜா! அந்த மரம் ஆத்தங்கரை ஓரத்தில இருக்கு |
| வீரர் 2 | : | ராஜா! அந்த மரத்த கொரங்குக வெச்சிருக்குங்க |
| வீரர்கள் | : | (குரங்குகளை நோக்கி) ஏய், கொரங்குகளா! அந்த மரத்தத் தாங்க! |
| குரங்குகள் | : | தரமாட்டோம்! (குரங்கரசன் வழி நடத்த) |
| வீரர்கள் | : | சதக்.. சதக்.சதக்.. |
| | | இது பதம் தீட்டின வாளு |
| குரங்குகள் | : | அசுக்...அசுக்... அசுக்... |
| | | இது புத்தித் தீட்டின வாலு |
| வீரர்கள் | : | சர்ரு... சர்ரு... சர்ரு... |

| | | |
|---|---|---|
| | | இது கூர்மையான அம்பு.. |
| குரங்குகள் | : | விர்ரு.. விர்ரு... விர்ரு... |
| | | இது கனமான கல்லு. |
| வீரர்கள் | : | அம்பு.. |
| குரங்குகள் | : | கல்லு.. |
| வீரர்கள் | : | அம்பு.. |
| குரங்குகள் | : | கல்லு... |
| வீரர்கள் | : | அம்பு... |
| குரங்குகள் | : | கல்லு.. |
| வீரர்கள் | : | அம்பு... |
| குரங்குகள் | : | கல்லு.. |
| | | (போர் முற்றவே, குரங்குகள் காயமடைகின்றன) |
| வீரர்கள் | : | அம்பு... |
| குரங்குகள் | : | ஆ! ஆ!.. ஆ!.... |
| குரங்கரசன் | : | (அடிபட்டக் குரங்குகளைக் கண்டு வேதனையடைந்தவாறே) கொரங்குகளே...! இந்த மரம் நம்மளுக்குக் கிடைக்காட்டினாலும் பரவால்ல. நாம உயிரோடு தப்பிச்சுப் போயிருவோம். நான்ஆத்துல பாலம் மாதிரி படுத்துக்கிறேன். என்மேல மிதித்துப் போங்க. (என்ற படியே, ஆற்றில் பாலமாகப் படுத்தது) |

(ஒவ்வொரு குரங்காய் ஏறிச் செல்ல, ராஜா தூரத்தில் யாவற்றையும் வேடிக்கை பார்க்க)

| | | |
|---|---|---|
| குரங்கு 1 | : | காவியம் |
| குரங்கு 2 | : | மணிக் காவியம் |
| குரங்கு 3 | : | லாகு |
| குரங்கு 4 | : | லட்சத்தின் தீவு |
| குரங்கு 5 | : | லட்சத்தின் கொக்கு |
| குரங்கு 6 | : | லட்சத்தின் சீடு |
| கெட்டக் குரங்கு | : | லட்சத்தில் மணல் வா...ரி... |

(என்றவாறே, குரங்கரசனை, ஆற்றுக்குள் உதைத்துத் தள்ளிவிட)

| | | |
|---|---|---|
| குரங்கரசன் | : | ஆ! காப்பாத்துங்க. |

ஆ! காப்பாத்துங்க (என்று நீரில்தத்தளிக்கிறது)

(தூரத்தில் வேடிக்கை பார்த்த ராஜா அதிர்ச்சியில்..)

| | | |
|---|---|---|
| ராஜா | : | காவலர்களே! அந்தக் கொரங்கக் காப்பாத்துங்க |

(காவலர்கள் காப்பாற்றிக் கொண்டு வந்த குரங்கரசனிடம்.)

| | | |
|---|---|---|
| | | கொரங்கு ராஜா! நீ ரொம்ப நல்ல ராஜாவா இருக்க. இங்க நடந்ததெல்லாம் நானும் பாத்துக்கிட்டு தான் இருந்தேன். இந்த மரத்த அபகரிக்கணும்னு நெனச்சு தான் நாங்க இங்க வந்தோம். ஆனா, நீ மரம் போனாலும் பராவயில்லன்னு சொல்லி, மக்கள் உயிரக் காப்பாத்தின. அதுனால இந்த மரத்த நீயே வைச்சுக்கோ. நான் நாட்டுக்கேப் போறேன் |
| குரங்கரசன் | : | ராஜா! நில்லு. நீ ரொம்ப நல்ல ராஜாவா இருக்க. இந்த மரத்த நீ உங்க நாட்டுக்குக் கொண்டு போயி,ஊண்டி வள. (என்று பழமாக, தன் தலையில் உள்ளக் குல்லாவை, ராஜாவாக வேடமிட்டுள்ள கோமாளியிடம் கொடுக்க) |
| கோமாளி | : | (சந்தோஷத்தில்) ஏய்! இரு. இரு. ஒரு நிமிஷம். (என்று கூடையை எடுத்துக் கொள்கிறான். |

(ஒவ்வொரு குரங்காக, தன் குல்லாவ பழமாக எண்ணி, கோமாளியின் கூடையில் போடுகிறது)

| | | |
|---|---|---|
| குரங்கு 1 | : | நல்ல ராஜா |
| கோமாளி | : | நல்ல கொரங்கு |
| குரங்கு 2 | : | நல்ல ராஜா |
| கோமாளி | : | நல்ல குல்லா |
| குரங்கு 3 | : | நல்ல ராஜா |
| கோமாளி | : | என் குல்லா |
| குரங்கு 4 | : | நல்ல ராஜா |
| கோமாளி | : | சந்தைக்குப் போவேன் |

குரங்கு 5 : நல்ல ராஜா
கோமாளி : குல்லா விப்பேன்
குரங்கு 6 : நல்ல ராஜா
கோமாளி : காசு வாங்குவேன்
குரங்கு 7 : நல்ல ராஜா
கோமாளி : அரிசி வாங்குவேன்
குரங்கு 8 : நல்ல ராஜா
கோமாளி : பருப்பு வாங்குவேன்
குரங்கு 9 : நல்ல ராஜா
கோமாளி : உப்பு வாங்குவேன்
குரங்கு 10 : நல்ல ராஜா
கோமாளி : வீட்டுக்கு ஓடிருவேன்
(குல்லாக்களை வாங்கிக் கொண்டே, உடனே ஓடுகிறான்)
அய்யய்யோ! எனக்கு வால் மொளச்சிருக்கு. அச்சச்சோ! உனக்கும் மொளச்சிருக்கா,
உனக்கு... உனக்கு...
(எங்கும் ஒரே அழுகை)
மூதாட்டி : ஏய்! நிறுத்துங்க, நிறுத்துங்க, ஏன் எல்லாரும் அழறீங்க?
குழு : வால் மொளச்சிருச்சு
மூதாட்டி : கோமாளிக்கிட்டக் கத கேட்டீங்களா?
குழு : ஆமா...
மூதாட்டி : அதான், வால் மொளச்சிருச்சு
குழு : வீட்டுக்குப் போகணுமே..
மூதாட்டி : போங்க.
குழு : வீட்ல வைவாங்களே...
மூதாட்டி : அப்படியா, அவங்களுக்கும் வால் வச்சிட்டாப் போச்சு
குழு : எப்படி?
மூதாட்டி : போய் கூட்டிட்டு வாங்க
(குழு சென்று இரண்டு பெற்றோர்களை அழைத்து வர, அவர்களுக்கும் வால் வைக்கப்படுகிறது)

-திரை-

## MAYA CHATTAI

The education or development of the children is bound with creativity. The relationship that we establish with children should kindle the creativity in their minds. The spontaneous creativity of children should has been curtained due to the impotency of educational plan and methodology. To release those children from the clutches of this, the present generation has concern for the Tamil society should take up steps to introduce a different educational system. We should pave paths to the new world for the children by introducing education through theater arts.

MAYA CHATTAI a drama has been created by the children in the drama workshop as an offshoot of their various creative talents. The source of this drama is 'empowering new cloth' a French folk tale. It is wonderful and unavoidable that the scene in which the king was dressed in mayachattai by the children through the various dramatic demonstrations like, forest, animals human beings with songs and merriment is an un explainable creative manner.

வட்டமாக சூழ்ந்து நிற்கும் நடிகர்கள் மூன்றாவது மணி அடித்ததும் மேடையின் மையப்பகுதியில் பல்வேறு திசைகளை நோக்கி அமர்ந்து கண்மட்டத்தில் தூரப்புள்ளியை தேர்ந்தெடுத்து வெறித்து நோக்கியபடி அமர்ந்துள்ளனர். பின் ஒருவர் மற்றொருவரிடம் பந்தை மாற்றியபடி ஒவ்வொருவரும் தன் பெயரை அறிவித்து பின் கடைசி நடிகரின் கைக்கு பந்து சென்றவுடன் அனைவரும் பார்வையாளர்களை நோக்கி சென்று எவ்வித முகச்சலனமும் அற்று நிற்கிறார்கள். பின் சிறிது சிறிதாக முகத்தில் அசைவுகள் ஏற்பட்டு பார்வையாளர்களைப் பார்த்து சத்தமாக சிரிக்கின்றனர். பின் கடைசி நபர் பார்வையாளரிடம் பந்தை கொடுப்பது போன்று கொடுத்து மூவரை ஏமாற்றுகிறார்.

பின் பாடல்

"மூடமூட மூடமூட மூடதேசம்
முட்டாள் முட்டாள் முட்டாள் முட்டாள் முட்டாள் ராஜா
முட்டாள் முட்டாள் முட்டாள் முட்டாள் முட்டாள் தேசம்
மூடமூட மூடமூட மூடராஜா"

இந்த நான்கு வரியும் மூன்றுமுறை திரும்ப திரும்ப பாட வேண்டும். பாடியபடி பின் திரும்பி நடந்து செல்கிறார்கள். சென்ற நடிகர்கள் அழுகின்றனர். அவர்களுள் ஒருவன் வெளியில் வந்து தலை சுற்றி மயங்கி விழுகிறான்.

நபர் : அம்மா
குழு : அம்மா
நபர் : அய்யோ
குழு : அய்யோ
நபர் : பசிக்குதே
குழு : பசிக்குதே
நபர் : சோறு சோறு சோறு
(என்றபடி ஏதேனும் ஒரு திசையை நோக்கி ஓடுதல்)
குழு : காசு காசு காசு
நபர் : சோறு வேணுமே
குழு : காசு கொடு
நபர் : காசில்லையே
குழு : சோறில்லையே
நபர் : பசிக்குதே
குழு : பணம் கொடு
நபர் : துணி துணி துணி துணி
(வேறொரு திசையை நோக்கி ஓடுதல்)
குழு : காசு காசு காசு காசு
நபர் : துணி வேணுமே
குழு : காசு கொடு
நபர் : காசில்லையே
குழு : துணியில்லையே
நபர் : உடம்ப மறைக்கணுமே
குழு : பணம் கொடு
நபர் : வீடு வீடு வீடு வீடு
(இன்னொரு திசையை நோக்கி ஓடுதல்)
குழு : காசு காசு காசு காசு
நபர் : வீடு வேணுமே
குழு : காசு கொடு
நபர் : காசில்லையே
குழு : வீடில்லையே
நபர் : தூங்க இடம் வேணுமே
குழு : பணம் கொடு
நபர் : படி படி படி படி

(பிறிதொரு திசை நோக்கி ஓடுதல்)

குழு : காசு காசு காசு காசு
நபர் : படிக்கணுமே
குழு : காசு கொடு
நபரர் : காசில்லையே
குழு : படிக்க முடியாதே
நபர் : சோறுக்கு
குழு : காசு
நபர் : துணிக்கு
குழு : காசு
நபர் : வீட்டுக்கு
குழு : காசு
நபர் : படிக்க கூட
குழு : காசு
நபர் : காசு காசு காசு காசு ச்சே!

இந்த காசு இல்லாம நாம வாழவே முடியாதா
இந்த நாட்டவிட்டு எங்கேயாவது போவோம்
(அனைவரும் சேர்ந்து காட்டை உருவாக்குதல்)
கிக்கி கிக்கி கிக்கி கிக்கி கிக்கி கிக்கி கீ கீ கீ கீ
குக்கு குக்கு குக்கு குக்கு குக்கு குக்கு கூ கூ கூ கூ
ககக ககக ககக கக கக ககக ககக கா கா கா கா
சசச சசச சசச சசச சசச சசச சசச சா சா சா சா
தததத தததத தததத தததத தததத தததத தாதாதாதா
பபப பபப பபப பபப பபப பபப பா பா பா பா
மமம மமம மமம மமம மமம மமம மா மா மா மா
ரரர ரரர ரரர ரரர ரரர ரரர ரா ரா ரா ரா ரா ரா
(நபர் காட்டை நோக்கி வருதல்)

நபர் : ஆ! குளிர்ந்த காற்று
காட்டின் எதிரொளி : காற்று, காற்று, காற்று
நபர் : அடர்த்தியான காடு
கா. எ : காடு காடு காடு
நபர் : பசுமையான மரங்கள்
கா.எ : மரங்கள் மரங்கள் மரங்கள்
நபர் : மொட்டுகள்
கா.எ : மொட்டுகள் மொட்டுகள் மொட்டுகள்
நபர் : பூக்கள்
கா.எ : பூக்கள் பூக்கள் பூக்கள்
நபர் : பழங்கள்
கா.எ : பழங்கள் பழங்கள் பழங்கள்
நபர் : காய்கள்
கா.எ : காய்கள் காய்கள் காய்கள்

(விலங்குகள் காட்டை நோக்கி வருதல்)
"சிங்கராஜா சிங்கராஜா காட்டுக்குள்ளே சிங்கராஜா
யானை மாமா யானை மாமா ஆத்துக்குள்ளே யானைமாமா
குள்ளநரி குள்ளநரிகாட்டுக்குள்ளே குள்ளநரி
ஆந்தையாரு ஆந்தையாரு காட்டுக்குள்ளே ஆந்தையாரு
கிக்கிக்கி கிக்கிக்கி ......................... கீ
சிங்கராஜா சிங்கராஜா சி.. ங்... க... ரா... ஜா...
சிங்கராஜா சிங்கராஜா சி.. ங்.. க... ரா... ஜா...

யானை மாமா யானை மாமா யா… னை… மா… மா…
கரடியண்ணா கரடியண்ணா க… ர… டி… ய… ண்… ணா…
குரங்கு தாத்தா குரங்கு தாத்தா கு.. ர… ங்…கு… தா… த்… தா…

இங்க இருக்கிற பழங்கள் எல்லாத்தையும் சாப்பிட்டாச்சு
மிச்சம் இருக்கிறது மிருகங்கள் மட்டும் தான் இதை வச்சு
நாட்டுக்கு போயி பொழப்பு தேடிக்கலாம்.

த்த்த்த்… தகததத்…
ரக்க ரக்க ரக்கர் ரக்கர்..
(நாலாபுறமும் விலங்குகளை தேடுதல் கடைசியாக)

நபர் : சிங்க ராஜா… யானை மாமா…
கரடியண்ணா… குரங்கு தாத்தா..
ஓ ஹோ! இதெல்லாம் குள்ளநரியோட திட்டமாக தான் இருக்கும்
ஒரு வேளை நாம் போட்ட திட்டம் தெரிஞ்சுருச்சோ
நாளைக்கு ஒரு நல்ல திட்டத்தோடு வருவோம்
(மறுநாள் விலங்குகளை தேடி வருதல்)

நபர் : சிங்க ராஜா… யானை மாமா… கரடியன்னா… குரங்கு தாத்தா…
எல்லாரும் வாங்க டவுனுக்கு கூட்டி போறேன்
ம்.. அன்பா சொன்னா எந்த மிருகமும் கேட்காது
இனி நம்ம வேலையை காட்ட வேண்டியது தான்
(வலையை கட்டி வெடிபோடுதல். மிருகங்கள் வலையில்மாட்டி கொண்டு அழுதல்)
(சிரித்துக் கொண்டே) நான் தான் இனி உங்களுக்கு ராஜா (சிரிப்பு) விலங்குகளுக்கு
பயிற்சி அளிக்கிறார்.

பயிற்சிகள் : Good Morning
வணக்கம்.
A, C, Z, UP, DOWN,
ஆடுடா ராமா. பாடுறா ராமா
Rain Rain Go away

நபர் : பாருங்க பாருங்க அம்மா பாருங்க
பாம்பே சர்க்கஸ் தூங்குடா ராமா உறங்குடா ராமா

குழு : பாம்பே சர்க்கஸ்
சர்க்கஸ்காரனும் தூங்குதல், விலங்குகளும் தூங்குதல்,
(விலங்குகள் தப்பித்து செல்கின்றனர்)
(சேவல் கூவுகிறது) (சேவல் கூவிடுச்சு மணி 5 தான்)

நபர் : ராமா டீ கொண்டுவா. டே ராமா டீ கொண்டு வா
(கம்பை தரையில் கோபமாக அடித்தல்)

நபர் : (திரும்புதல்) ஐயோ மிருகங்கள காணோமே
ராமா. கிருஷ்ணா
அய்யோ கஷ்டப்பட்டு பிடிச்ச மிருகங்கள் எல்லாம்
ஓடி போச்சே
இப்ப பொழப்புக்கு என்ன பண்ணுவேன்
இனிமேல் பட்டினி தானா
(யானை கத்துதல்)

நபர் : நல்ல வேளை ஒரு கிழட்டு பெண் யானை மட்டும் இருக்கு
இது ஓடாம இருக்கு இதையாச்சும் சந்தோஷமாக வைத்திருப்போம்.
இது குளிச்சு ஒரு வருஷமாச்சு
இது குளிக்க கூட்டிகிட்டு போவோம்.
(அரண்மனையில் உள்ள அனைவரும் அழுதல்)

நபர் 1 : நம்ம ராசா இறந்து போயிட்டாரே

நபர் 2 : அவருக்கு வாரிசு இல்லையே

நபர் 3 : பக்கத்து நாட்டுக்காரங்க படையெடுத்து வருவாங்களே!
(பறையடித்தல்)
இதனால் சகல மக்களுக்கு தெரிவிப்பது என்னவென்றால் நமது ராஜா திடீரென்று இறந்துவிட்டார். அவருக்கோ வாரிசு இல்லை. அதனால் நம் பட்டத்து யானையின் கையில் மாலையை கொடுத்து அது யார் கழுத்தில் மாலை இடுகிறதோ அவரே அரசராக தேர்ந்தெடுக்கப்படுவார்.

நபர் : பட்டத்து யானை மாலையிடும் அரசர்

குழு : வாழ்க, வாழ்க

மக்கள் : யானை யானை அரசர் யானை
யானை வரும் மாலை போடும்

நபர் : தேய்க்க தேய்க்க அழுக்க போகும்
அழுக்கு போக குளிக்க வேணும்
(யானை பள்ளத்தில் கால் தடுக்கி மாலை சர்க்கஸ்காரன் மேல் விழுதல்)

மக்கள் : (வாயில் அடித்துவிட்டு)
ஆண்யானையான அரசர் யானை
பெண் யானையை பார்த்து போறப்ப பள்ளம் தடுக்கி மாலை
சர்க்கஸ்காரன் மேலே விழுந்திடுச்சு இனி அவன் தான் ராஜா
இது என்ன அநியாயம்

குழு : நான் தான் ராஜா... ராஜா...
நான் தான் ராஜா... ராஜா...
நான் தான் ராஜா... ராஜா..

அரசன் : Stop
நீதான் கூஜா..

அரசன் : நானே ராஜா... நானே ராஜா....
தலைமை மந்திரி:அரசே அரண்மனைக் கி... கி..

அரசன் : செல்வோம்
(அனைவரும் வழி விடுதல்)
(அரசசபை கூடுதல்)

அரசன் : மக்களே

குழு : சாமி மகாராசா

அரசன் : எனது அரசாட்சியில் உங்களின் நலன் கருதி பல நன்மைகள் செய்ய உள்ளேன்

குழு : சாமி மகாராசா

அரசன் : கிழக்கில் தான் சூரியன் உதிக்கும்

குழு : சாமி மகாராசா

அரசன் : வானத்திலிருந்து தான் மழை கொட்டும்

குழு : சாமி மகாராசா

அரசன் : கடலில் தான் அலை வீசும்

குழு : சாமி மகாராசா

அரசன் : தரையில் தான் செடி முளைக்கும்

குழு : சாமி மகாராசா

அரசன் : நாளை சிறுவர்களுக்காக ஊரெங்கும் சர்க்கஸ் நடத்தப் பெறும்.

குழு : சாமி மகாராசா
(வரிசையாக கள் கலயத்துடன் நிற்றல்)
அரசர் ஒவ்வொரு கலயத்தில் இருக்கும் கள்ளை குடித்தல்
உல்ல உல்ல உல்ல உல்லாசம்
ராஜா எனக்கு சந்தோஷம்

அரசர் : மந்திரியாரே

த.ம. : அரசே

அரசர் : நான் கள்குடிக்கும் போது கலயம் மூக்கில் இடிக்கிறது.

எவ்வளவு செலவானாலும் பரவாயில்லை எனக்கு மூக்கு கவசம் தேவை
உல்ல உல்ல உல்ல உல்லாசம்
ராஜா எனக்கும் சந்தோஷம்
(மக்கள் அழுதல்)
அரசன் : மந்திரியாரே
த.ம. : அரசே
அரசன் : நீண்ட நாட்களா எனக்கு ஒரு பாட்டு சத்தம் கேட்கிறது ஏதாவது திருவிழாவா?
த.ம. : இல்லை அரசே, மக்கள் பசியால் அழுகின்றனர்
அரசன் : அழுகிறார்களா?
த.ம. : ஆம் அரசே உணவுக்கு அழுகை, உடைக்கு அழுகை, இருப்பிடத்திற்கு அழுகை
அரசன் : ச்சே மக்கள்னா அழுகை, அழுகைனா மக்கள்
த.ம. : நாளை அரசரின் பிறந்த நாளை முன்னிட்டு இன்று சிறப்பாக அவை கூடுகிறது.
த.ம. : (அரசரிடம்) உங்களின் பிறந்த நாளை சிறப்பாக...
அரசர் : ம் தலைமை தையல்காரரை அழைத்து வாருங்கள்
த.ம. : உத்தரவு
(மந்திரி தையல்காரரை அழைத்து வருதல்)
த. தை : வணக்கம் அரசே
அரசர் : நாளை என் பிறந்தநாள்
த.தை : மிக்க மகிழ்ச்சி
அரசர் : இதுவரை உலகத்தில் யாரும் அணிந்திடாத ஆடை ஒன்று வேண்டும்.
அதுவும் இலைகளால் செய்திருக்க கூடாது. துணியால் செய்திருக்கக் கூடாது
விலங்குகளின் தோலினால் செய்திருக்கக்கூடாது பட்டு நூலால் செய்திருக்க கூடாது
அதுவும் நாளைக்குள் வேண்டும் இது அரச ஆணை.
த.தை : உத்தரவு அரசே(மக்கள்அழுகை)
உல்ல உல்ல உல்லாசம்
ராஜா எனக்கு சந்தோஷம்
த.தை : இங்கோ மக்கள் பசியால் அழுகிறார்கள்
அங்கோ மன்னர் உல்லாசமாக இருக்கிறார்
(மக்களிடம் சென்று)
த.நதை : நீங்கள் பசியால் அழுகிறீர்கள்.
நான் மன்னரின் ஆணையால் அழுகிறேன்.
(மக்களும் தையல்காரரும் சேர்ந்து பேசிவிட்டு சிரித்தல்)
(த.தை அரசரிடம் சென்று)
த.தை : அரசே ஆடை தயார்
குழு : அரசர் வாழ்க
அரசர் : அமைதி
த.தை : தலைமை தையல்காரர் என்ற முறையில் சில கருத்துக்களை கூற விரும்புகிறேன்.
அரசே உங்களின் பிறந்த நாளுக்காக நாங்கள் இரவும் பகலும் அரும்பாடுபட்டு ஆடை
தயாரித்துள்ளோம். அதன் சிறப்பு என்னவென்றால் இந்த ஆடை நல்லவர்கள்
கண்களுக்கு மட்டும் தெரியும். இந்த ஆடை மேசையின் மேல் உள்ளது.
தாங்கள் அணிந்து கொள்ளுமாறு கேட்டுகொள்கிறேன்.
(அரசர் உடையை பார்க்கசெல்லுதல்)
(உடையை பார்த்தவுடன்)
அரசன் : ஆஹா! அற்புதம்
குழு : அற்புதம், அற்புதம்
(அரசர் உடையை அணிதல்)
குழு : அரசர் வாழ்க
(என்ற சத்தத்துடன் அம்மண ராஜாவுடன் ஊர்வலமாக வருதல்)
பாடல்

மக்களோ மக்கள் நாமதான் மக்கள்
மன்னரோ மன்னர் அம்மண மன்னர்
சட்டையோ சட்டை மாயச்சட்டை
(அனைவரும் வந்து வணக்கத்துடன் முடித்தல்)

-திரை-

## மாயச்சட்டை குழு

### அரங்கில் ....

| | | |
|---|---|---|
| P.இரவிக்குமார் | S.விக்கி | M.சுரேஷ்ராஜன் (மாயச்சட்டை மன்னன்) |
| O.மணிகண்டன் | M.சதீஸ்குமார் | N.இராம்குமார் |
| C.அருண்குமார் | S.முருகபாண்டி | ஆனந்த் |
| S.வினோத்குமார் | P.முனியசாமி | K.அழகிரி |
| N.இராமச்சந்திரன் | K.கணேஷ்பாபு | O.மாரிமுத்து |
| R.பாஸ்கர்ராஜா | சிவராமன் | சசிகுமார் |
| செல்வகணேஷ் | S.சுந்தர்ராஜன் | R.ஸ்டாலின்ராஜா |
| D.பாலமுருகன் | P.மணிகண்டன் | O.மோகன் |
| D.பழனிச்சாமி | சிவமுருகன் | C.பிரேம்குமார் |
| செல்லப்பாண்டி | R.வினோத் | |

### பின்னரங்கில்

ஒருங்கிணைப்பு : J.**ஜான்பிரௌனி**

நிகழ்ச்சி தயாரிப்பு : A.S.**கார்த்திக்பாரதி**
மதுரை சீடு முழுமைத்துவக் கல்வி மையங்கள்

வடிவமைப்பு நெறியாளுகை : **திருமிகு. சண்முகராஜா**

### இயக்குநர்

சண்முக ராஜா தமிழ்மொழி மற்றும் இலக்கியத்தில் முதுகலை பட்டம் வெற்றவர். தேசிய நாடகப் பள்ளியில் நாகடத்திற்கான முதுநிலை பட்டயமும் வெற்றவர். 40க்கும் மேற்பட்ட முக்கிய நாடகத் தயாரிப்புகளில் பணியாற்றியவர். பி.வி.காரந்த், ராமானுஜம், அனுராதாகபூர் போன்ற நாடக வல்லுநர்களோடு பணிபுரிந்தவர். இவர் இயக்கிய நாடகத் தயாரிப்பு ''மாரத்–ஸாடு", "பாடம் ஒரு இருள் வரி", "சிப்பி ஜுங்" தற்போது இவர் மதுரையில் இயங்கிவரும் 'நிகழ்' கலை–பண்பாட்டு மையத்தின் நாடகத் துறைக்கான கலை இயக்குநர். மேலும் தற்போது திரையுலகில் சிறந்த குணச்சித்திர நடிகராக பிரகாசித்து வருகிறார்.

## அறுந்த வால் – குழு

**அரங்கில்**

P.பாண்டியராஜன்
பாலமுருகன்
கண்ணன்
M.மகுடபதி
M.தங்கலெட்சுமி (குரங்கரசன்)
C.கற்பகஜோதி
N.நாகலெட்சுமி
மகாலெட்சுமி
M.அமுதா
பாண்டிசெல்வி
மீனா
C.P.சத்யா
சபீனாபானு
C.முத்துமாரி
T.பாண்டியம்மாள்
V.கவிதா
பிரியா (கதை சொல்லி, கோமாளி)

**பின்னரங்கில்**

ஒருங்கிணைப்பு : J.ஜான்பிரௌனி , S.சசிகலா

நிகழ்ச்சி தயாரிப்பு : U.கௌதமன், A.S.கார்த்திக்பாரதி,
மதுரை சீடு முழுமைத்துவக் கல்வி மையங்கள்

எழுத்து, வடிவமைப்பு, நெறியாளுகை : திருமிகு. **அனீஸ்**

**இயக்குநர்**

சென்னையை வசிப்பிடமாகக் கொண்ட திருமிகு. அனீஸ் அவர்கள் அமெரிக்கன் கல்லூரி முன்னாள் தமிழ்த்துறை மாணவர். புதுச்சேரி பல்கலைக்கழக நாடகத்துறையில் முதுகலை பட்டமும் பெற்றவர். தமிழகமெங்கும் குழந்தைகளுக்காக நாடக பயிற்சி வழங்கி வருவதோடு மட்டுமின்றி புலம் பெயர்ந்த தமிழர்களின் குழந்தைகளுக்காவும் பணி செய்து வருபவர். தமிழ் திரைப்படங்கள் பலவற்றிற்கு துணை இயக்குநராக பணிபுரிந்து வருகின்றார். சீடு–இன் ஆரம்ப காலந்தொட்டே ஆலோசகராகவும், தொண்டராகவும் இருந்து வழிகாட்டுபவர். இவரின் அறுந்தவால், நீலக்குதிரை, போன்று எண்ணற்ற குழந்தை நாடகங்களை இயக்கி வடிவமைத்தள்ளார்.

குழந்தைகளிடையே பணி செய்வதில் அதீத ஆர்வமும் ஈடுபாடும் கொண்ட நாடகவியலாளர். நாடகங்கள் வழி கல்வியை வழங்குவதன் மூலம் வளமான மானுடர்களை கொண்ட சமூகத்தை படைக்க முடியும் என்பதில் வலுவான நம்பிக்கை உடையவர்.

## Enlightening 'invisible children'



**Skillful performance.**

A HOT and dusty evening found hundreds of school students braving the heat and mosquitoes patiently at the `Sevalyam Vidudi Ulagam' on Saturday. The event? `Uravadal 2003,' the third anniversary of the SEED, a holistic education centre for
Madurai's own slum children runs largely by volunteers.

More than 600 students, parents and volunteers participated in the programme, which comprised felicitations and special cultural programmes organised by the students of the SEED.

The highlight of the programme was a play staged by students from standards VI to VIII, entitled `Vaalaruntha Kurangu,' and directed by one of the volunteers, Aneesh.

A three-part drama enthralled the audience, as did the many dance programmes performed by students from standards V to XII. Remarkably, the entire show, a skilful presentation of the children's artistic talents, was put together in five days. These students come from very poor families, attend corporation schools, do plenty of chores at home and still spend 18 hours a week at the SEED's volunteer classes. Kudos to them.

The SEED's objective is to bring the slum children into the mainstream academia

Nirmala Jeyaraj, principal of the Lady Doak College, presided over the function and felicitated the student performers. The annual report of the SEED's activities spoke about the variety of activities, including seminars, workshops, science club and several others. The programme itself was a pointer to what an individual, when part of a collective team, can achieve and make a significant contribution to the society. All it takes then is grit and determination.

By Preethi Chandrasekar.

28.4.2003 ஹிந்து நாளிதழில் வெளிவந்த கட்டுரையின் ஒரு பகுதி

